பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 07 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உற்பத்தி தொழில்களுக்கான வலுவான கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் எல்லை மாவட்டங்களின் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாடு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

3. சிறு-குறு நிறுவனங்களின் கடன் விண்ணப்பங்கள் மீது வங்கிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சி உத்தரவிட்டுள்ளார்.

4. கிராமப்புறங்களில் இணையவசதி உருவாக்கும் பாரத் நெட் திட்டத்திற்கு பெருமைமிகு குளோபல் பரிசு கிடைத்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து இடையே, 21 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது மகளிர் ஹாக்கி போட்டி இன்று நடைபெறுகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

உற்பத்தி தொழில்களுக்கான வலுவான கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், எதிர்கால வளர்ச்சிக்கான சிறப்பான செயல் திட்டத்தை இந்தியா கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் மின்னணு சிப் முதல், கப்பல் கட்டும் தொழில் வரை உற்பத்திக்கான கட்டமைப்புகள் உருவாக்கித் தரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

''அதிகம் வளர்ச்சிப்பெற்று - அதிக சாதனைகள் படைப்போம்'' என்ற தாரக மந்திரத்துடன், நாட்டின் வளர்ச்சிப்பணிகளில் இந்திய மக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ், மின்னணுப் பொருட்கள், ஆட்டோ மொபைல் மற்றும் மருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நவீன உட்கட்டமைப்பு வசதிகள் விரைவான வளர்ச்சி பெற்று வருவதாக தெரிவித்த பிரதமர், உலகின் மூன்றாவது மெட்ரோ ரயில் கட்டமைப்பை இந்தியா பெற்றுள்ளதையும் குறிப்பிட்டார்.

பயணிகளுக்கான சொகுசு வசதிகளுடன் துரித பயணத்திற்கான நமோ பாரத் மற்றும் வந்தே பாரத் ரயில் சேவைகளும் விரைவான வளர்ச்சி பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு உற்பத்தி தொழில்துறையில் சுயசார்பை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த பிரதமர், உலகின் நம்பிக்கை மிகுந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக கூறினார்.

தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை முன்னுதாரணமாக திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் எல்லைப்பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், எல்லையோர மாவட்டங்களில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாடு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், உத்தராகண்ட், ராஜஸ்தான், குஜராத், உத்தரப்பிரதேசம், பீகார், மேற்குவங்க மாநிலங்களில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

வடகிழக்கு மாநிலங்களின் காவல்துறை அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

சட்டவிரோத ஊடுருவல்களை தடுக்கவும் எல்லைப்பகுதியை மாற்றியமைக்கும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் இம்மாநாடு நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சிறு-குறு நிறுவனங்களின் கடன் விண்ணப்பங்கள் மீது வங்கிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சி, உத்தரவிட்டுள்ளார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வங்கிக் கடன் வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டால் தொழில்முனைவோர் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறினார்.

இதுதொடர்பாக மாநில அளவிலான வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டத்திலும், மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டத்திலும் ஆலோசனை நடத்த வேண்டும் என்று திரு ஜித்தன் ராம் மாஞ்சி வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

ஸ்மார்ட் போன், மடிக்கணினி உள்ளிட்டவற்றின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இதற்காக பயன்படுத்தப்படும் மின்னணு உதிரிபாகங்கள் மீதான சுங்கவரி ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு மின்னணு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப செயலர் திரு எஸ் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், மின்னணு உற்பத்தித்துறை பயனடையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொலைக்காட்சி பெட்டிகள், மடிக்கணினிகள் உள்ளிட்ட மின்னணுப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான இறக்குமதி செலவு கணிசமாக குறையும் என்றும், உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பார்த் நெட் திட்டத்தின்கீழ், இணையவசதி உருவாக்கும் திட்டத்திற்கு பெருமைமிகு குளோபல் பரிசு கிடைத்துள்ளதற்கு மத்திய

அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, தொலைத்தொடர்புத்துறைக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் இந்த விருதை வழங்குகிறது.

பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொலைநோக்கு திட்டத்திற்கும், உள்ளார்ந்த டிஜிட்டல் இந்தியா முயற்சிகளுக்கும், உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளது நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மின்னணு பொது கட்டமைப்புக்கு முன்னோடியாக இந்தியா வளர்ந்து வருவதாக கூறிய அவர், மக்கள் சார்ந்த மின்னணு தேவைகளை பூர்த்தி செய்வதிலும் இந்தியா மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார்.

கிராமப்புற மக்களுக்கு இணையதள வசதி உறுதி செய்யப்பட்டுள்ளதால், அரசின் சேவைகள் தடையின்றி கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கிராமப்புறங்களில் சுகாதாரம், கல்வி, வேளாண்மை, மின்னணு வங்கி, மின் ஆளுமை, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு

துறைகளிலும் வளர்ச்சியை எட்டுவதற்கு, பாரத் நெட் இணையதள சேவை துணைபுரிவதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள், நவீன வேளாண் சேவைகளை பெறுவதற்கும், மாணவர்கள் இணையவழியில் கற்பதற்கும், கிராமப்புற மக்கள் இணையவழி மருத்துவ சேவை பெறுவதற்கும் இது வழிவகுப்பதாக அவர் கூறினார்.

கிராமப்புறங்களில் உள்ள தொழில்முனைவோர், நகர்ப்புறங்களில் உள்ள பெரிய சந்தைகளை இணையதளம் வாயிலாக அணுகுவதற்கு வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் திரு திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக அளவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மையமாக இந்தியாவை மாற்ற உறுதிபூண்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் உரையாற்றிய மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு எஸ் கிருஷ்ணன், உற்பத்தியை அதிகரிக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடிவடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உலகளாவிய செயற்கை நுண்ணறிவு சூழலுக்கு ஏற்ப இந்தியாவை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறிய அவர், பல்வேறு துறைகளில் திறனை மேம்படுத்த இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் அனந்த நாகேஸ்வரன், உலகின் 50 சதவீத திறன் மையங்கள் இந்தியாவில் செயல்பட்டு வருவதாக கூறினார்.

மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் மக்களின் ஆற்றல் மூலம் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ், 22 லட்சம் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2014-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், 9 ஆயிரத்து 404 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், அறுவடை இயந்திரங்கள், வேளாண் கருவிகள், விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன்கீழ், வடகிழக்கு மாநிலங்களுக்கு சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

52 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவியுடன், ட்ரோன்களை பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் ஆறாவது 100 சதவீத எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உத்தராகண்ட் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் அம்மாநிலம் முழு எழுத்தறிவு பெற்றதாக ஆளுநர் திரு குர்மித் சிங் அறிவித்துள்ளார்.

மிசோரம், கோவா, திரிபுரா, இமாச்சலப்பிரதேசம், சிக்கிம் மாநிலங்களுக்கு பிறகு ஆறாவது 100 சதவீத எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உத்தராகண்ட் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது வரலாற்று சாதனை என்று அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி கூறியுள்ளார்.

அரசின் திட்டங்கள் மற்றும் மக்களின் பங்களிப்புடன் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரளா மற்றும் மகாராஷ்ட்ராவி பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இந்த பருவமழை தற்போது ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், வட அரபிக்கடல் பகுதிகளுக்கு சென்றடைந்துள்ளது.

தில்லி, உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதாக இந்தியா வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தில்லியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்புப்பணியில் பொதுப்பணித்துறையும், மாநகராட்சியும் ஈடுபட்டுள்ளன.

பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டு அறைக்கு சென்ற தில்லி பொதுப்பணித்துறை அமைச்சர் திரு **Parvesh Sahib Singh,** மீட்புப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி மாநகராட்சியில் தேங்கியிருக்கும் மழை வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

**Minto** பாலம் உள்ளிட்ட பல்வேறு சாலைகளில் போக்குவரத்து தடையின்றி செயல்பட்டு வருவதாக திரு **Parvesh Sahib Singh** கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையே, 21 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது மகளிர் ஹாக்கி போட்டி இன்று நடைபெறுகிறது.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 11.30-க்கு தொடங்குகிறது.

------------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Madhurima Sawant** — இங்கிலாந்தின் **Summer Yardley** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 7-5 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **Judith Miranda** — ஆஸ்திரேலியாவின் **Naomi** இணையை வென்றது.

-------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறவுள்ளது.

**Bristol**-ல் இப்போட்டி இரவு பத்து மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<**END**>>>>>>